வணக்கம்
ஆகாஷ்வாணி – புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 11.09.2026 – வெள்ளிக்கிழமை    நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

புதுடெல்லியில் நாளை தொடங்கும் **பிரிக்ஸ்** உச்சி **மாநாடு,** உலக நன்மைக்கான அர்த்தமுள்ள விவாதங்களுக்கு, வாய்ப்பாக அமையும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மாநாட்டில் பங்கேற்கும் உலகத் தலைவர்களை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இருதரப்பு ரீதியிலும் சந்திக்கிறார்.

உலகில், வெளிப்படையான, பலதரப்பு வர்த்தக கட்டமைப்பு ஒன்றையே பிரிக்ஸ் நாடுகள் ஆதரிப்பதாக, **பிரிக்ஸ் வர்த்தக பேரவை கூட்டம்** கூறியுள்ளது.

இன்று மகாகவி சுப்ரமணிய பாரதியார் நினைவு நாள், புதுச்சேரியில், அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது.

மோடி பிரிக்ஸ் -1 (03)

புதுடெல்லியில் நாளை தொடங்கும் **18ஆவது** பிரிக்ஸ் உச்சி **மாநாடு,** உலக நன்மையை நோக்கமாகக் கொண்டு, பல்வேறு முக்கிய பிரச்சனைகள் குறித்து அர்த்தமுள்ள விவாதங்களை மேற்கொள்ளும் வாய்ப்பாக அமையும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இம்மாநாட்டில் பங்கேற்க, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து தலைவர்கள், புதுடெல்லியில் கூடி வருவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். மாநாடு குறித்து கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

மோடி பிரிக்ஸ் -2 வாய்ஸ் (20)

(வாய்ஸ்)

உலக பொருளாதாரத்தில் நெகிழ்வுத் தன்மை, நீடித்த தன்மை, புதுமையாக்கம் மற்றும் ஒத்துழைப்பை கட்டியமைத்தல் என்ற மையக் கருத்து அடிப்படையில், இந்திய தலைமைத்துவத்தின் கீழ் நடைபெறும் 2 நாள் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில், சீனா, ரஷ்யா, பிரேசில், எகிப்து, தென்னாப்பிரிக்கா, இந்தியா உட்பட, முக்கியமான 11 வளரும் நாடுகள் பங்கேற்கவுள்ளன. மாநாட்டில் பங்கேற்கும் உலக தலைவர்களில், ரஷ்ய அதிபர் திரு. **விளாடிமிர் புடின்,** சீன அதிபர் திரு. **ஜி ஜின்பிங்,** எகிப்து அதிபர் திரு. **அப்துல் ஃபட்டா எல்-சிசி,** தென்னாப்பிரிக்க அதிபர் திரு. **சிரில் ரமஃபோசா,** இந்தோனேஷிய அதிபர் திரு. **பிரபாவோ சுபியந்தோ** உள்ளிட்டோர் அடங்குவர். புதுடெல்லி பாரத் மண்டபத்தில், பிரிக்ஸ் உச்சி மாநாட்டை ஒட்டி, **பாரத் இன்னோவேட்ஸ்** என்ற பெயரில், இந்தியாவின் புதுமைப் படைப்புகள் குறித்த கண்காட்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டில் பங்கேற்கும் உலக தலைவர்களை பிரதமர் திரு.நரேந்திர மோடி இருதரப்பு ரீதியிலும் சந்திக்கிறார். இத்தகைய சந்திப்புகளில், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின்-உடனான முதலாவது சந்திப்பு இன்று மாலை நடைபெற்றது. இதை தொடர்ந்து பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுடெல்லியில், ஈரானிய அதிபர் திரு. **மசூத் பெஷ்கியானை** சந்திக்கிறார். ஐ.நா. பொதுச் செயலர் திரு. **அன்டோணியோ குட்டரேஸையும்,** பிரதமர் சந்திப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நிர்மலா (13)

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில், ரஷ்ய கூட்டமைப்பின் முதலாவது துணை பிரதமர் திரு. **டெனிஸ் மான்ட்டுரோவை** சந்தித்துப் பேசினார். பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு முன்பாக நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, நிதி உள்ளிட்ட துறைகளில் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகள் குறித்து, இருதரப்பினரும் விவாதித்தனர். இருதரப்பு ரீதியில் முதலீட்டு ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகளை,

தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும், இந்த சந்திப்பின்போது ஒப்புக்கொள்ளப் பட்டதாக, நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க வந்துள்ள பிரேசில் வெளியுறவு அமைச்சர் திரு. **மாரோ வியேரா**, உருகுவே வெளியுறவு அமைச்சர் திரு. **மரியோ லுபேட்கின்** ஆகியோரை, வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர், இன்று புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார்.

ஜெய்சங்கர் -1 (20)

புதுடெல்லியில் நாளை தொடங்கவுள்ள பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு முன்பாக, இன்று நடைபெற்ற **பிரிக்ஸ் வர்த்தக பேரவைக்** கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். உலக பொருளாதாரத்தில் நிச்சயமற்ற சூழல் அதிகரித்து வரும் நிலையில், தற்போது, பொருளாதாரத்தின் நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்துவதே , ஒவ்வொரு நாட்டிற்கும் முக்கிய உத்தியாக திகழ்வதாகவும், இதர நாடுகள் உடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதன் மூலம், நீடித்த தன்மையை ஊக்குவிக்க, தேவை இருப்பதாகவும், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தமது உரையில் கூறினார். பிரிக்ஸ் நாடுகளில் ஸ்டார்ட்அப் நிறுவனங்களை பேணி வளர்க்கும் **இன்குபேட்டர் அமைப்புகளுக்கு** இடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும், புதுமைப் படைப்புகளின் அடிப்படையிலான ஸ்டார்ட்அப் சூழலை ஊக்குவிக்க, **தனி நிதி** அமைக்கவும், இந்தியா விரும்புவதாக அவர் தெரிவித்தார். உலக பொருளாதாரத்தில் 40 சதவிகிதப் பங்களிக்கும் பிரிக்ஸ் நாடுகள், தங்களின் பொருளாதார வலுவை, மக்களுக்கான வேலை வாய்ப்புகளாகவும், **செல்வ வளமாகவும்**, மாற்றிக் கொள்ளுதல் அவசியம் என்று, தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தமது உரையில் கூறினார். பிரிக்ஸ் நாடுகள் பரஸ்பர வர்த்தகத்தை, தங்களின் சொந்த நாணயம் மூலமாக மேற்கொள்ளவும்,

**ஜெய்சங்கர் -2 (05)**

இந்தியாவின் UPI பணப் பரிமாற்ற வசதியுடன், தங்களை இணைத்துக் கொள்ளவும், முன்வர வேண்டும் என அவர் வலியுறுத்தினார். ரஷ்ய பொருளாதார வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. **மக்சிம் ரெஷிட்நிகோவ்** உள்ளிட்டவர்களும், **பிரிக்ஸ் வர்த்தக பேரவைக்** கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**மோடி – வினோபா (09)**

இன்று ஆச்சார்ய வினோபா பாவே பிறந்த நாளை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழாரம் சூட்டியள்ளார். அனைத்து மக்களின் நலன் மற்றும் அதிகார மேம்பாட்டிற்கு பல்வேறு விதங்களில் பாடுபட்டவர் ஆச்சார்ய வினோபா பாவே என்றும், **ஜெய் ஜெகத்** என்னும் அவரது அறைகூவல், எல்லா எல்லைகளையும் தாண்டி, மனித குலத்தை முன்னிறுத்தியதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். சமத்துவம், கண்ணியம் மற்றும் சேவையில், வினோபாவிற்கு இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையே சமூகத்தின் விளிம்பு நிலை மக்களுக்கு வலுவூட்டியதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

**பிரிக்ஸ் -1 (06)**

மும்பையில், பிரிக்ஸ் நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களுக்கு இடையிலான கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், தனிப்பட்ட நாடுகள் வரி அல்லது வரி அல்லாத வர்த்தகத் தடைகளை ஒருதரப்பாக மற்ற நாடுகள் மீது விதிப்பது குறித்து தீவிர கவலை வெளியிடப்பட்டது. இது குறித்து கூடுதல் விவரங்கள்...

**(வாய்ஸ்)**

**பிரிக்ஸ் -2 வாய்ஸ் (14)**

**(வாய்ஸ்)**

<u>உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகளுக்கு ஏற்ற, வெளிப்படையான, பலதரப்பு, திறந்த நிலை வர்த்தக கட்டமைப்பு ஒன்றையே பிரிக்ஸ் நாடுகள் ஆதரிப்பதாகவும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புவி-அரசியல் பிணக்குகள் மற்றும் ஸ்திரமற்ற கொள்கைகளால் குறிப்பாக வளரும் நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் பிரிக்ஸ்</u>

நாடுகள் வலுவாக வளர்ச்சியடைந்து வருவதாகவும், வளர்ச்சியை மேலும் அதிகரிக்கும் வகையில் நிதி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை தொடர்ந்து வலுப்படுத்திக் கொள்ள பிரிக்ஸ் நாடுகள் உறுதிபூண்டுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை நிதித்துறையில் பயன்படுத்திக் கொள்ள அதிக வாய்ப்புகள் இருப்பதையும், இத்தகைய தொழில்நுட்பங்களின் பயன்பாட்டில் நன்னெறிகளை பின்பற்றுதல் அவசியம் என்பதையும், பிரிக்ஸ் நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

## புதுச்சேரி பாரதியார் (09)

மகாகவி சுப்ரமணிய பாரதியார் நினைவு நாளான இன்று புதுச்சேரியில், பாரதி பூங்காவில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, அமைச்சர்கள் திரு. ராஜவேலு, திரு. சிவகொழுந்து, அரசு கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து ஈஸ்வரன் கோவில் வீதியிலுள்ள பாரதியார் அருங்காட்சியகத்தில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவப் படத்திற்கும் இவர்கள் மலரஞ்சலி செலுத்தினர். விழாவின் போது பாரதியாரின் தேசபக்தி பாடல்கள் இசைக்கப்பட்டன.

## வங்கி போராட்டம் (08)

புதுச்சேரியில் 500க்கும் மேற்பட்ட வங்கி ஊழியர்கள் இன்று பணிகளைப் புறக்கணித்து போராட்டம் தொடக்கி இருப்பதால், சுமார் 200 கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. வாரம் 5 நாள் வேலை உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த 4 நாள் போராட்டம் மேற்கொள்ளப்படுவதாக வங்கி ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் கோரிக்கைகள் தீர்க்கப்படா விட்டால், தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் இவர்கள் கூறியுள்ளனர்.

## புதுச்சேரி விநாயகர் (13)

புதுச்சேரியில், காராமணிக்குப்பம் பகுதியிலுள்ள ஜீவானந்தம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், பள்ளி வளாகத்தில் சேகரிக்கப்பட்ட 30 கிலோ பழைய காகிதங்களைக் கொண்டு, 5 அடி உயர விநாயகர் சிலை

ஒன்றை உருவாக்கி உள்ளனர். விநாயகரின் ஒரு கையில் உடனடி உணவுகளைத் தவிர்த்து, ஊட்டச்சத்து மிகுந்த இயற்கை உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு வாசகம் இடம் பெற்றுள்ளது. விளையாட்டின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில், விநாயகரின் கால் அருகே, கால்பந்து வைக்கப்பட்டுள்ளது. சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் விநாயகர் சதுர்த்தி கொண்டாடும் வகையில், பிளாஸ்டிக் மற்றும் ரசாயனப் பொருட்களை பயன்படுத்தாமல் விநாயகர் சிலை உருவாக்கப்பட்டு இருப்பதையும், விநாயகர் சிலையின் விழிப்புணர்வு அம்சங்களையும், அனைத்து தரப்பினரும் பாராட்டியுள்ளனர்.

## பாப்பையா (09)

புகழ்பெற்ற தமிழ் அறிஞரும், பட்டி மன்ற நடுவருமான சாலமன் பாப்பையா, மதுரையில் இன்று காலமானார். 90 வயதான அவர், முதுமை காரணமான உடல்நலக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டு இருந்தார். தனித்துவமான மதுரைத் தமிழில், சமூக பிரச்சனைகளை பழந்தமிழ் இலக்கியத்துடன் கலந்து பேசும் பாணிக்கு புகழ்பெற்ற சாலமன் பாப்பையா, இந்தியா மற்றும் வெளிநாடுகளில், சுமார் 12 ஆயிரம் பட்டிமன்ற நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். மதுரை அமெரிக்கன் கல்லூரி, தமிழத்துறை தலைவராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற அவர், பத்மஸ்ரீ உட்பட பல்வேறு விருதுகளை வென்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வானிலை (14)

இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடலூர், விழுப்புரம், தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 17ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள, வங்கக்கடல் பகுதிகள் மற்றும் கடலோர தமிழக பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என

அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, சென்னை ICF-இல், 6 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

## ஹாக்கி (10)

சீனாவில் நடைபெறும் ஆசியக் கோப்பைக்கான ஜூனியர் ஹாக்கி போட்டித் தொடரின் ஆடவர் பிரிவில், இந்தியா- மலேசியா அணிகளுக்கு இடையே இன்று நடைபெற்ற அரையிறுதி போட்டியில், இந்தியா, 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. இனி பாகிஸ்தான்-தென்கொரியா அணிகளுக்கு இடையிலான, 2ஆவது அரையிறுதி போட்டியில் வெற்றி பெறும் அணியுடன், இந்தியா இறுதிப் போட்டியில் மோதும். இதற்கிடையே, ஆசிய கோப்பைக்கான ஜூனியர் ஹாக்கி போட்டித் தொடரின் மகளிர் பிரிவில், இந்தியா-தென்கொரியா அணிகளுக்கு இடையிலான அரையிறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## கட்கரி (11)

மோட்டார் வாகன உரிமையாளர்கள், தங்களின் FASTag வில்லையை மாற்றாமலேயே, ராஜ்மார்க் யாத்ரா செயலி மூலம், வங்கிக் கணக்கை மாற்றிக் கொள்ளும் வகையிலான, FASTag-portability வசதியை, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி மும்பையில் இன்று தொடக்கி வைத்தார். மோட்டார் வாகனங்கள், சுங்கச் சாவடியில் காத்திருக்கும் நேரத்தை, நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள், 10 விநாடிகளுக்கும் கீழாகக் குறைக்க, அரசு நடவடிக்க எடுத்து வருவதாகவும், சுங்கச் சாவடியில் நிற்கத் தேவையின்றி வாகனங்கள் பயணிப்பதை அனுமதிக்கும் வகையில், புதிய நடைமுறை ஒன்றைக் கொண்டு வர, முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

**மீண்டும் தலைப்புச் செய்திகள்**

புதுடெல்லியில் நாளை தொடங்கும் **பிரிக்ஸ் உச்சி மாநாடு,** உலக நன்மைக்கான அர்த்தமுள்ள விவாதங்களுக்கு, வாய்ப்பாக அமையும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மாநாட்டில் பங்கேற்கும் உலகத் தலைவர்களை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இருதரப்பு ரீதியிலும் சந்திக்கிறார்.

உலகில், வெளிப்படையான, பலதரப்பு வர்த்தக கட்டமைப்பு ஒன்றையே பிரிக்ஸ் நாடுகள் ஆதரிப்பதாக, **பிரிக்ஸ் வர்த்தக பேரவை கூட்டம்** கூறியுள்ளது.

இன்று மகாகவி சுப்ரமணிய பாரதியார் நினைவு நாள், புதுச்சேரியில், அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது.

**இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/SM/VM**